செ.வெ.எண்.09 நாள் : 05.01.2017

# அரியலூர் மாவட்டம் 149.அரியலூர் சட்டமன்ற தொகுதி மற்றும் 150.ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதி வாக்காளர் வரைவு பட்டியலை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் இன்று (05.01.2017) வெளியிட்டார்.

அரியலூர் மாவட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் **149.அரியலூர் சட்டமன்ற தொகுதி மற்றும் 150.ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதி** ஆகியவற்றிற்கான வாக்காளர் வரைவு பட்டியலை மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் இன்று (05.01.2017) வெளியிட்டு, தெரிவித்ததாவது :-

அரியலூர் மாவட்டத்தில் உள்ள **149.அரியலூர் சட்டமன்ற தொகுதி மற்றும் 150.ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதிகளின்** வாக்காளர் வரைவு பட்டியல் 01.09.2016-ஆம் தேதி வெளியிடப்பட்டதின் அடிப்படையில் 149.அரியலூர் சட்டமன்ற தொகுதியில் **1,22,538** ஆண் வாக்காளர்களும், **1,22,734** பெண் வாக்காளர்களும், **4** இதர வாக்காளர்களும் மொத்தம் **245276** வாக்காளர்கள் உள்ளனர். 150.ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதியில் **1,23,508** ஆண் வாக்காளர்களும், **1,25,729** பெண் வாக்காளர்களும் மொத்தம் **2,49,237** வாக்காளர்கள் உள்ளனர். இம்மாவட்டத்தில் **2,46,046** ஆண் வாக்காளர்களும், **2,48,463** பெண் வாக்காளர்களும், **4** இதர வாக்காளர்களும் ஆக மொத்தம் **4,94,513** வாக்காளர்கள் உள்ளனர்.

01.09.2016 அன்று வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டதை தொடர்ந்து சிறப்பு சுருக்க திருத்த காலமான 01.01.2017 அன்றைய தேதியின்படி 18 வயது நிரம்பியவர்கள் மற்றும் வாக்காளர் பட்டியல்களில் இதுவரை பெயர் இடம் பெறாதவர்கள் ஆகியோர்களிடமிருந்து விண்ணப்பங்கள் **01.09.2016 முதல் 30.09.2016** வரை அந்தந்த வாக்குச்சாவடி நிலை அலுவலர்களால் படிவம்-6ல் **12,969** படிவங்களும், படிவம்-7ல் **308** படிவங்களும், படிவம்-8ல் **2,140** படிவங்களும், பழவம்-8Aல் 1216 படிவங்களும் பெறப்பட்டு விசாரணை செய்யப்பட்டு படிவம்-6ல் **12,354** படிவங்களும், பழவம்-7ல் **216** படிவங்களும், படிவம்-8ல் **2,101** படிவங்களும், படிவம்-8Aல் **965** படிவங்களும் ஏற்பளிக்கப்பட்டது.

இன்று (05.01.2017) வெளியிடப்பட்ட இறுதி வாக்காளர் பட்டியலின்படி 149.அரியலூர் சட்டமன்ற தொகுதியில் **1,24,326** ஆண் வாக்காளர்களும், **1,24,055** பெண் வாக்காளர்களும், **5** இதர வாக்காளர்களும் மொத்தம் **2,48,386** வாக்காளர்கள் உள்ளனர். 150.ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதியில் **1,25,490** ஆண் வாக்காளர்களும், **1,27,115** பெண் வாக்காளர்களும் மொத்தம் **2,52,605** வாக்காளர்கள் உள்ளனர். இம்மாவட்டத்தில் **2,49,816** ஆண் வாக்காளர்களும், **2,51,170** பெண் வாக்காளர்களும், **5** இதர வாக்காளர்களும் ஆக மொத்தம் **5,00,991** வாக்காளர்கள் உள்ளனர் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், வட்டாட்சியர் (தேர்தல்) திரு.ரவி மற்றும் அலுவலகள் கலந்துகொண்டனர்.

செய்தி வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், அரியலூர்.